NAMMAKKAL MUNICIPALITY
நாமக்கல் நகராட்சி

ISO-14001 : 2004

ந.க.எண்.3349/2023/எப்1

நகராட்சி அலுவலகம், நாமக்கல்,
நாள். 08.04. 2024.

**அறிவிப்பு**

பொருள் : பணிகள் – நாமக்கல் நகராட்சி – மனைப்பிரிவு – நாமக்கல் நகராட்சி – மேலப்பட்டி மேல்முகம் கிராமம், சர்வே எண். 375/3,375/4A- இல் 1.54 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு அனுமதி கோரியது – மனைப்பிரிவுக்கான கட்டணத் தொகை மற்றும் மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் – குறித்த விவரங்கள் தெரிவித்தல் – தொடர்பாக.

பார்வை :
1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எ.ண்.12843/2022/டிபி1 எண்ணிட்ட சுற்றறிக்கை நாள்.20.10.2022.
2. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.NKL/JLCQE9D/ 9427/2022/ TCP, நாள்.31.05.2023.
3. திரு. A.ஆதிம்நாத், த/பெ.ஆதிராமுலு, கதவு எண்.5/33, திருமலைசாமி தெரு, நாமக்கல் என்பவரின் விண்ணப்பம். நாள்.02.06.2023.

******

பார்வை–2இல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடிதத்தில், நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட மேலப்பட்டி மேல்முகம் கிராமம், சர்வே எண்கள். 375/3,375/4A இல் 1.54 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கீழ்க்கண்ட விவரப்படி மனைப்பிரிவின் பரப்பில் 3% சந்தை மதிப்புக் கட்டணத்தையும் மற்றும் மனைப்பிரிவுக்கான கட்டணத் தொகையினையும் உரிய தலைப்பு கணக்கில் நகராட்சி கருவூலத்தில் செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண். | கட்டண விவரங்கள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | தெருவிளக்கு கட்டணம் | ரூ.1,10,000/– |
| 2 | மனைப்பிரிவு கட்டணம் (1.54) ஏக்கர் | ரூ. 20,000/- |
| 3 | அபிவிருத்திக் கட்டணம் | ரூ. 10,000/– |
| 4 | கூர்ந்தாய்வு கட்டணம் | ரூ. 1000/– |
| 5 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் (C&D Waste) | ரூ. 2000/– |
| 6 | அரசு வழிகாட்டி மதிப்பு கட்டணம் 3% | ரூ. 20,000/– |
| 7 | மனைப்பிரிவு வைப்பு தொகை கட்டணம் | ரூ.2,00,000/– |
| 8 | தெருக்கள் அனுமதி கட்டணம் | ரூ. 40,000/– |
| | மொத்தம் | ரூ.4,03000/– |

பார்வை–1ல் காணும் சுற்றறிக்கையின்படி, மனைப்பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அடிப்படை வசதிகளுக்கு நகராட்சி தெரிவிக்கும் மதிப்பீட்டை தாங்கள் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் தாங்களாகவே மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளை மேற்கொள்ள விரும்பினால் அரசாணை எண்.141வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள்.16.07.2022–ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு விவரங்கள் மற்றும் நிபந்தனைகளை பின்பற்றி பணிகளை செய்வதாக நகராட்சிக்கு மனு மூலம் தெரிவிக்க வேண்டும்.

<u>நிபந்தனைகள்</u> :

1. தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள மனைப்பிரிவில் கண்டுள்ள சாலைகள், பூங்காக்கள், திறந்தவெளி ஒதுக்கீடு இடங்கள் முதலானவை தானபத்திரத்தின்படி, சரியாக உள்ளதா என்பதை சரிப்பார்க்கப்பட்ட பின் தானமாக ஒப்படைக்கப்பட்ட சொத்து விவரங்களை உள்ளாட்சி பராமரிப்பிற்கு ஏற்க ஏதுவாக நகராட்சிகள் நகர்மன்றத்தின் பின்னேற்பு ஒப்புதலை பெற்றுக் கொள்ளப்படும்.
2. வளர்ச்சிப் பணிகளை (சாலைகள், சாக்கடைகள், குடிநீர் குழாய் மற்றும் பாதாள சாக்கடை வசதிகள்) நிறுவ மூன்றாம் நபர் (அருகே உள்ள பொறியியற் கல்லூரி) வாயிலாக ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் மற்றும் சான்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.
3. மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தி அடைந்த பின் இவற்றின் எது அதிக காலமோ அது வரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / மனைப்பிரிவு உரிமையாளரைச்சாரும்.
4. பராமரிப்பு பணிகளுக்கான திரும்ப செலுத்தக்கூடிய வைப்புத் தொகையாக ரூ.1.00 இலட்சம் ( ஒரு இலட்சம் மட்டும் ), ஒரு ஏக்கர் அல்லது அதன் பகுதி பரப்பளவிற்கு என கணக்கிட்டு செலுத்தப்பட வேண்டும்.
5. தான சாசனத்தின் வாயிலாக பெறப்பட்ட சொத்து விவரங்கள் நில அளவைப் பதிவேடுகள் மற்றும் நில அளவை ஆவணங்களில் உட்பிரிவு செய்யப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டும்.
6. பராமரிப்பு காலத்தில் பராமரிப்பு பணிகளை மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / மனைப்பிரிவு உரிமையாளர் மேற்கொள்ள தவறினால் மேற்காணும் பணிகள் உள்ளாட்சி வாயிலாக செய்யப்பட்டு அதற்கான தொகை, மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகையில் இருந்து ஈடு செய்யப்படும். பராமரிப்பு காலம் முடிந்த பின்னர் உரிய ஆய்வுக்கு பின்னர் மீதி வைப்புத் தொகையை திரும்ப வழங்கப்படும்.

ஆணையாளர்,
நாமக்கல் நகராட்சி.

பெறுநர்

திரு. A.ஆதிம்நாத்,
த/பெ.ஆதிராமுலு,
கதவு எண்.5/33, திருமலைசாமி தெரு,
நாமக்கல்.

<u>நகல்:</u>

நகராட்சிப் பொறியாளர்,
நாமக்கல் நகராட்சி.

கலைஞர் 100
1924 - 2023

NAMMAKKAL MUNICIPALITY
நாமக்கல் நகராட்சி

ISO-14001 : 2004

**நாமக்கல் நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர் : திரு.கா.சென்னுகிருஷ்ணன், எம்.ஏ.,**

**தொ.மு..எண். 3349/2023/எப்1,** **நாள் : 10.05.2024.**

பொருள் : மனைப்பிரிவு – நாமக்கல் நகராட்சி –மேலப்பட்டி மேல்முகம் கிராமம் – சர்வே எண்கள். 375/3, 375/4A இல் 1.54ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவு – இறுதி ஒப்புதல் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :
1. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.NKL/JLNCQE9D/9427/2022/TCP, நாள். 31.05.2023.
2. நகராட்சிப் பொறியாளர், நாமக்கல் அவர்களின் குறிப்பு, நாள். 23.02.2024.
3. நகர்மன்ற தீர்மானம் எண். 125, நாள்.28.02.2024.

******

<u>உத்திரவு:–</u>

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட மேலப்பட்டி மேல்முகம் கிராமம் சர்வே எண்கள். 375/3, 375/4A இல் 1.54 ஏக்கர் பரப்பளவில் உள்ள இடத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி கோரி தங்களால் நேரிடையாக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதை, பார்வை–1இல் கண்டுள்ள நாமக்கல் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் உத்தரவில் மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மனைப்பிரிவில் அடிப்படை வசதிகளான சாலைவசதி, மழைநீர் வடிகால் வசதி மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் வசதி ஆகியவை நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும், தெருவிளக்கு அமைப்பதற்கான மதிப்பீடுத் தொகை ரூ.1,10,000/–ஐ செலுத்துமாறு பார்வை–2இல் கண்டுள்ள குறிப்பில் நகராட்சி பொறியாளர் அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும், மூன்றாம் நபரின் சான்று பெற்றப்பட்டுள்ளது. பார்வை–1இல் கண்டுள்ள செயல்முறைகளின் நிபந்தனை எண்.5இன்படி 3% சந்தை மதிப்பு ரூ.20,000/–மற்றும் மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.20,000/–கூர்ந்தாய்வு

கட்டணம் ரூ.1,000/– ஆகியவை நகராட்சிக்கு செலுத்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பார்வை–3ல் கண்டுள்ள நகர்மன்ற தீர்மானத்தில் நகராட்சி பராமரிப்பிற்கு சாலைகள், வடிகால், ஆகியவை எடுத்துக்கொள்ளவும், இறுதி ஒப்புதல் வழங்கவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. சாலைகள் பொது ஒதுக்கீடு இடங்கள் நகராட்சிக்கு தானமாக தானப்பத்திரம் எண். 2373/2023இன் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பார்வை–1இல் கண்டுள்ள உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் செயல்முறைகளில் மனைப்பிரிவிற்கு SWP/DTCP/NAMAKKAL/ LAYOUT No.198/2023 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பார்வை–1இல் கண்டுள்ள செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள், பொது நிபந்தனைகள் மற்றும் மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு, பார்வை–3இல் கண்டுள்ள நகர்மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்திரவிடப்படுகிறது.

ஆணையாளர்,
நாமக்கல் நகராட்சி.
10/05/24

இணைப்பு

1. மனை உட்பிரிவு வரைபடம்.
2. மனைப்பிரிவு நிபந்தனைகள்.

பெறுநர்:

திரு. A.ஆதிராம்நாத்,
த/பெ. ஆதிராமுலு,
5/33, திருமலைசாமி தெரு,
நாமக்கல்.

நகல். உதவிப் பொறியாளர், நாமக்கல் நகராட்சி – பொது உபயோக இடம் மற்றும் சாலைகளை, சாலைப்பதிவேட்டில் பதிவு செய்யவும் மற்றும் பராமரிப்பு செய்யும் பொருட்டு.

நகல். உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை அலுவலகம், நாமக்கல் – அவர்களின் தகவலுக்கு.

நகல். வருவாய் ஆய்வாளர், நாமக்கல் நகராட்சி – காலி மனைகளின் மீது வரி விதிப்பு செய்யும் பொருட்டு.

நகல். நகர சார் ஆய்வாளர், நாமக்கல் நகராட்சி, அவர்கள் ஒப்படை செய்யப்பட்ட மனைப்பிரிவு சாலை இடத்தினை நகராட்சி ஆணையர் பெயருக்கு பட்டா மாறுதல் செய்ய தேவையான நடவடிக்கை மேற்கொள்ள.

நகல். நகரமைப்பு அலுவலர், நகரமைப்பு ஆய்வர், நாமக்கல் நகராட்சி.